APPOLO STUDY CENTRE

# TNPSC GROUP I MAIN EXAM – 2023

# MANDATORY TEST I

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**Total Marks: 100** **Time : 3 hrs**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

1. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

    1. திருக்குறள் மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் என்பதை சான்று தந்து விளக்குக
    2. திருக்குறள் கூறும் தத்துவ கருத்துக்களை தொகுத்து எழுதுக
    3. திருக்குறள் உலகப்பொதுமறை என அழைக்கப்படுவது ஏன்? சான்றுடன் விளக்குக
    4. திருக்குறளும் மனிதநேயமும் என்ற தலைப்பில் ஓர் கட்டுரை வரைக
    5. அறன் வலியுறுத்தல் அதிகாரம் மூலம் வள்ளுவர் கூறும் அறக்கருத்துகளை தொகுத்தெழுதுக.

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

வலுவான வரலாற்று ஆதாரங்களைக் கொண்டிருக்கும் சமூகத்தினர் நாம். இலக்கியங்கள் என்றால் சங்க காலத்திலிருந்து சான்றுகள் இருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெருநாகரிகத்துடன், கீழை மற்றும் மேலை நாடுகளுடன் வாணிபத் தொடர்பைத் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர் என்று சிலப்பதிகாரம், பரிபாடல், மதுரைக்காஞ்சி போன்ற பண்டைய தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றிவந்தன. இதை உறுதிப்படுத்தும் விதத்தில், தொல்லியல் அகழாய்வுகளில் கரிம மாதிரிகள் கிடைத்துள்ளன. அவை அமெரிக்காவின் மியாமி நகரில் அமைந்துள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு, காலக்கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிச்சநல்லூரில் நடந்த அகழாய்வுவழி கிடைத்த முதுமக்கள் தாழி கி.மு.850 – கி.மு.610 காலகட்டத்தைக் கணிக்க உதவியது என்றால், கீழடியில் காணக்கிடைத்த எச்சங்கள் வைகைக் கரையில் சுட்ட செங்கற்களாலான கட்டடங்களுடன் கி.மு.580-இல் ஒரு நகர நாகரிகம் இருந்ததைக் கணிக்க உதவின. கீழடியில் பானை ஓடுகளில் சுமார் 70-க்கும் மேற்பட்ட தமிழி/தமிழ்- பிராமி எழுத்துகளும், சுமார் 600 ஓடுகளில் கிறுக்கல் கோடுகளும் கிடைத்தன. இவை 2500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததைக் கணிக்க உதவின.

சிவகளை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற நெல்மணிகளைக் கரிமப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியபோது அதன் வயது 3,175 ஆண்டுகள் (கி.மு.1,155) என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொற்கை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற மேற்கத்திய நாட்டுப் பானை ஓடுகளும், வெள்ளி முத்திரைக் காசுகளும் பண்டைக் காலத்திலேயே பன்னாட்டு வணிகம் நடைபெற்றதற்கான சான்றுகள். மயிலாடும்பாறையில் நடந்த அகழாய்வில் கிடைக்கப்பெற்ற இரும்புக் கருவிகள் கி.மு.2172 கி.மு. 1615க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை என ஆய்வு மூலம் தெரியவருகிறது. தொடரும் ஆய்வுகள் நம்முடைய தொன்மையை மட்டும் அல்லாது வரலாற்று மேன்மையையும் வெளிப்படுத்துகின்றன.

**வினாக்கள்**

1. கீழடி ஒரு நகர நாகரிகம் எனக்கணிக்க உதவியது எது?
2. எந்த தமிழ் இலக்கியங்கள் கீழை மற்றும் மேலை நாடுகளுடன் தமிழர்கள் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர் எனக்கூறுகின்றன?
3. கரிம மாதிரிகள் பகுப்பாய்வு செய்வதற்கு எங்கு அனுப்பப்பட்டன?
4. இரும்பு கருவிகள் எங்கு கிடைத்தன?
5. தமிழர்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதற்கான சான்று யாது?

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்**

3. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

**நகரமயமும் கிராம மையமும்**

இந்தியாவிலேயே அதிகம் தொழில்மயமான மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. இந்தியாவில் வேறெந்த மாநிலத்தைவிடவும் தமிழ்நாட்டில்தான் தொழிற்சாலைகள் அதிகம். இந்தியாவில் இன்றுள்ள 2.46 லட்சம் தொழிற்சாலைகளில் தமிழ்நாட்டில் மட்டும் 38,837 தொழிற்சாலைகள் உள்ளன. தமிழ்நாட்டைக் குறுக்கும் நெடுக்குமாக இணைக்கும் 1,99,040 கி.மீ சாலைகள், 5,952 கி.மீ ரயில் பாதைகள் நல்ல தொழில் சூழலுக்கான நுழைவாயிலாக அமைந்துள்ளன. தமிழ்நாடு குறிப்பிட்ட சில துறைகளில் மட்டும் தன்னைக் குறுக்கிக்கொள்ளவில்லை. வாகனங்கள், ஜவுளி, தோல் பொருட்கள், பிளாஸ்டிக், மருந்து எனப்பலதரப்பட்ட துறைகளிலும் உற்பத்தியில் தமிழ்நாடு கவனம் செலுத்துகிறது. தமிழ்நாட்டில் 110 தொழில் பூங்காக்களும் தொழில் பேட்டைகளும், 49 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் உள்ளன. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை முன்யோசித்து, நாட்டிலேயே முதலாவதாக இதற்கெனக் கொள்கை வகுத்ததும் 12.80 லட்சம் சதுர அடியில் ஆசிய அளவில் பிரமிக்கத்தக்க ‘டைடல் பார்க்’ திறந்ததும் தமிழ்நாடு. 48.45% மக்கள் இங்கே நகரங்களில் வாழ்கிறார்கள். அதேசமயம், கிராமங்களை மையப்படுத்திய சித்தனை எவ்வளவு முக்கியம் என்பதையும் உணர்ந்து செயல்படும் சமூகம் நம்முடையது. வேளாண்மை தந்த வலுவான அடித்தளத்திலேயே நாம் நம்முடைய தொழில் வளர்ச்சியைக் கட்டமைத்துள்ளோம். ஆகையால்தான், விலையில்லா மின்சாரத்தை வழங்கும் முன்னோடி மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு இருக்கிறது. நகர வளர்ச்சியானது கிராம வளர்ச்சியை முடக்கிவிடக்கூடாது என்பதாலேயே பேருந்துகள் தொடங்கி பள்ளிக்கூடங்கள், சுகாதார நிலையங்கள் வரை அனைத்தும் கடைசி கிராமங்களையும் சென்றடைவதை இலக்காகக் கொண்டு இயங்குகின்றன. இந்தியாவிலேயே மிகச்சிறந்த போக்குவரத்துக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முன்வரிசையில் இருக்கிறது. இந்திய அளவில் அதிக எண்ணிக்கையில் (22,000) அரசுப் பெருந்துகளை இயக்கும் மாநிலம் நம்முடையது. லாபக்கணக்கு பார்க்காமல் மலையோரக் கிராமங்களில் மழை நாள் நள்ளிரவில் ஓரிரு பயணிகளுக்காகவும் இயங்கும் அரசுப் பேருந்துகள் நம்முடைய ‘நகரமய – கிராமமைய சமநிலைப் பார்வை’ க்கான தூதர்கள்.

வரலாற்றுப் பெருமைகள் மட்டுமே ஒரு சமூகத்தின் மதிப்பைத் தீர்மானித்துவிடுவது இல்லை; சமகாலத்தில் அதன் இடத்தைத் தீர்மானிப்பதில் பொருளாதாரம் முக்கியமான பங்கு வகிக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தின் நான்கு சிங்கங்கள் என்று அழைக்கப்படும் மாநிலங்களில் ஒன்று நம் தமிழ்நாடு. மஹாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம் ஆகியவற்றோடு நாமும் உயர்ந்து நிற்கிறோம். இந்தியாவின் ஜிஎஸ்டியில் 42% பங்கை இந்த நான்கு மாநிலங்கள் மட்டும் கொண்டிருக்கின்றன. மஹாராஷ்டிரத்திற்கு அடுத்து இந்தியாவின் பெரிய பொருளாதாரம் நம்முடைய தமிழ்நாடு

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

4. **பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி – பல்லவர் காலம் - சோழர் காலம் - பாண்டியர் காலம் - நவீன காலம் - சுதந்திரத்திற்கு பின் தமிழகக் கல்வி

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

5. **பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

பெண்கள் எல்லாத் தளங்களிலும் முன் நிற்கும் நிலமாகவே நம் தமிழ்நாடு இருந்திருக்கிறது. மிகச்சிறந்த சான்று அறிவுத் துறையில் ஔவையின் வீச்சு. உங்களுக்குத் தெரியுமா? ஔவை ஒருவர் இல்லை. சங்க காலம் தொட்டு வெவ்வேறு காலகட்டங்களில் ஔவை என்ற பெயரில் பெண் புலவர்கள் பலர் செயல்பட்டிருக்கிறார்கள். தமிழர்கள் தம்முடைய அடிப்படைக் கல்வியையே ஔவையின் ஆத்திசூடியிலிருந்து, 'அறம் செய விரும்பு' என்று தொடங்குவது, தமிழ்ச் சமூகம் அறத்தையே ஆதாரமாகக் கருதுகிறது என்பதைச் சுட்டுவதாகும். அது பாகுபாடு ஒழித்து, சமத்துவத்தை நிலைநாட்டல்! 'பாகுபாடுகளின் தாய்' என்று பாலினப் பாகுபாட்டைத்தான் உலகம் சுட்டுகிறது. தமிழ் அறம் அதைக் களையும் வகையிலேயே ஔவையிடமிருந்து பாடத்தைத் தொடங்குகிறது.

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

6. **பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

India has found 5.9 million tonnes of lithium reserves in the Reasi district of Jammu & Kashmir. This may be the seventh-largest deposit of the rare element, accounting for roughly 5.7% of all the reserves in the world. They are also said to be of a higher grade 550 parts per million (ppm) against the average 220 ppm making them highly lucrative.

*Lithium Reserves in India*

Lithium's discovery in Jammu and Kashmir is possibly not the element's first discovery in the nation. Around 1,600 tonnes of lithium reserves were found in Mandya, Karnataka. But there hasn't been any commercial supply of the metal from that site till now.

- In addition to that, the government is also running a Lithium exploration program in several other states including Arunachal Pradesh, Andhra Pradesh, Chhattisgarh, Jharkhand, Jammu & Kashmir and Rajasthan.
- Currently, India is dependent on imports. In fiscal 2022, India imported lithium and lithium ion worth almost ₹14,000 crores. The demand is likely to explode in the future.
- With 50% of the deposits concentrated in three South American countries—Argentina, Bolivia, and Chile—the lithium triangle is where the majority of the world's lithium reserves are located. China, on the other hand, has an advantage over other nations and is in charge of 75% of the world's lithium refining.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலிருந்து, அலுவலக ஆணை மற்றும் கடிதங்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டு பயன்படுத்துதல் தொடர்பாக அனைத்து துறைச் செயலாளர்கள், அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அனைத்து துறைத் தலைவர்கள், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் உட்பட செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயக்குழு ஆகியோர்க்கு கடிதம் ஒன்று எழுதுக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. வாகை சூடினான்
2. ஆயத்தம்
3. இலக்கு
4. நெறியோடு

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. வலை - வளை
2. உலவு - உழவு
3. வளி - வழி
4. அண்ணம் - அன்னம்

**c. பிரித்து எழுதுக**

1. பள்ளிக்கூடம்
2. மாசிலன்
3. எளிதாகும்
4. தம்முயிர்

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. மாறன் நன்கு எழுதுவான்
2. அவன் பரிசு பெற்றான்
3. மாணவர்கள் வகுப்பறையை தூய்மை செய்தனர்
4. உழைப்பே உயர்வு தரும்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. புலி வந்தன; எருதுகள் ஓடியது
2. சாரை பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது
3. மரத்தின் கணியைப் பரித்து உண்டான்
4. பூ மனம் வீசியது

APPOLO STUDY CENTRE